**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

CC.No.128/2023 தேதி 16.03.2026

PW1 – திரு. சிவக்குமரன், 51/2026 , த/பெ. கண்ணுசாமி

**(எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவர்களால் குவிமுச பிரிவு 311 ன் கீழ் சாட்சியை திரும்ப அழைக்க மனுதாக்கல் செய்து அது Crmp 1639/2023 தேதி 14.06.2024 அன்று அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.)**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் திரு.அகிலன், Junior Assistant என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சாட்சி 2 சுதா என் மனைவி என்றால் சரிதான். அவர் சம்வத்தின் போது ஊ.ம.த இருந்தார் என்றால் சரிதான். சம்பவ இடமானது வடக்கு தெற்கு சாலை என்றால் சரிதான். ரோட்டிற்கு கிழக்கே எதிரிகள் வீடு உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடமானது வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி செல்லும் பாதை பின்பு கிழக்கிலிருந்து தெற்காக செல்லும் பாதை என்றால் சரிதான். அந்த பாதை தொடர்ந்து மேற்கு நோக்கி செல்லும் என்றால் சரிதான். அந்த பாதை தான் எதிரி தோப்பிற்கு தேங்காய் ஏற்றிச்செல்லும் பாதை என்றால் சரிதான். அந்த பாதை எதிரி பயன்படுத்துவதில் எனக்கு வருத்தம் உள்ளது என்றால் இல்லை. சம்பவ இடமானது மண் சாலை என்றால் சரிதான். எதிரி வீட்டின் அருகில் உள்ள சாலையில் தான் சம்பவம் நடந்தது என்றால் சரிதான். எதிரி வீட்டு வேலிக்குள் சம்பவம் நடந்தது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு எதற்காக சென்றேன் என்றால் என் மனைவி சொன்னதன்பேரில் சென்றேன். எதற்காக அங்கு என் மனைவி போக சொன்னார் என்றால் சாலை மேம்பாட்டு பணிக்காக என் மனைவி என்னை பார்க்க சொன்னார், என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லாததால் என்னை போக சொன்னார். என் வீடு சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு நான் காரில் சென்றேன். என்னுடன் காரில் யார் வந்தார் என்றால் கிருஷ்ணமூர்த்தி வந்தார். எத்தனை மணிக்கு சம்பவம் நடந்தது என்றால் 14.02.2023 சுமார் 01.15 மணி இருக்கும். சம்பவம் நடந்த பிறகு காவல் நிலையம் எப்போது சென்றேன் என்றால் மாலை 3.00 மணிக்குள்.

நாங்கள் எதிரியிடம் எதாவது தகராறு செய்தோமா என்றால் இல்லை. புகாரை யார் எழுதினார் என்றால் நான் தான் எழுதினேன். சம்பவ தினத்தன்று எதிரி என் மீது புகார் கொடுத்தார்

என்றால் இல்லை. நான், கிருஷ்ணராஜ், பிரேம்குமார், சாமி, புவனேஸ்வரன் நாங்கள் எதிரி வீட்டிற்கு காரில் சென்று தகராறு செய்ததாக எதிரி எங்கள் மீது புகார் கொடுத்தார் என்றால் எதிரி கொடுக்கவில்லை. எதிரியின் நண்பர் பாலசுப்பிரமணியம் அன்று இரவு வேறு வழக்கு சம்பந்தமாக என் மீது கொடுத்தார். நான் அவரை தாக்கியதாக அந்த வழக்கு கொடுத்துள்ளார். நான் கொடுத்த வழக்கு சம்பந்தமாக போலிஸார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் அன்று மாலை விசாரித்தார்கள். அப்போதே என் மனைவியையும் விசாரித்தார்கள். நான் புகார் கொடுத்த போலிஸார் என்னை விசாரித்தார்களா என்றால் ஆமாம். அப்போது எதிரியையும் விசாரித்ததாக சொன்னார்கள். போலிஸார் விசாரணையில் என் மனைவி அவருக்கு உடல்நிலை சரியில்லை என்று சொன்னாரா என்றால் சொன்னார். அதன் பின்பு போலிஸார் எங்களை விசாரித்தார்களா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் எதிரி என்னிடம் தகராறு செய்யவில்லை என்றாலும், நாங்கள் தான் எதிரி வீட்டிற்கு சென்று தகராறு செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. என் மனைவி என்னை சம்பவ இடத்தை பார்வையிட சொல்லவில்லை என்றாலும் பார்வையிட சென்றதற்கு எந்த சான்றும் இல்லை என்றால் சரியல்ல. என் மனைவி ஊ.ம.த என்பதால் அதிகாரத்தை பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என் மனைவியின் செல்வாக்கை பயன்படுத்தி எதிரி என்மீது கொடுத்த வழக்கை போலிஸாரை விசாரிக்க விடாமல் தடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல.

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு.த.சுதர்சன் **M.A.,L.L.B.,**
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை.